
## திராவிடத்தால் வாழ்கிறோம்

788

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

56

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# பகுத்தறிவுப் பாதையில்...

திராவிட இயக்கம் என்றால், அது ‘கடவுள் மறுப்பு இயக்கம்’ என்ற கண்மூடித்தனமான விமர்சனம் இருக்கிறது. ஆனால், வறட்டுத்தனமாகவோ, மேலோட்டமாகவோ கடவுள் மறுப்புக் கொள்கையை ‘திராவிட இயக்கம்’ முன்வைக்கவில்லை. ‘சுயமரியாதை இயக்கமும்’, ‘குடிஅரசு’ இதழும் தோன்றிய பிறகே, கடவுள்கள் குறித்த விரிவான ஆராய்ச்சியில் பெரியார் இறங்கினார். சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்ற இழிவுக்குக் காரணம் கடவுள்களும், சாஸ்திரங்களும் என ஆராய்ந்து நிறுவினார். அந்தப் பணிக்கு பின்னடைவாக எதுவும் இருக்கக்கூடாது என்றே தேர்தல் பாதையைத் தவிர்த்தார் பெரியார்.

ஆனால், நமது கொள்கைகளுக்கு சட்ட வடிவம் வேண்டுமென்றால், அதிகாரம் அவசியம் என்று தேர்தல் பாதையைத் தேர்ந்தெடுத்தார் பேரறிஞர் அண்ணா.




ஓவியம் : சிகரன்

1949-இல் கிரேக்கப் புராணக் கடவுள்கள் பற்றி ‘திராவிட நாடு’ இதழில் திறனாய்வு செய்த அண்ணா, அதில் மறைமுகமாக நமதையும் விளாசினார். ஆனால், அதில் நாத்திகம்- ஆத்திகம் என்றல்லாமல், பகுத்தறிவையே முன்னிறுத்தினார். அது தி.மு.கழகத்தின் கொள்கை, கடவுள் மறுப்பல்ல, பகுத்தறிவு என்ற தோற்றத்தைத் தந்தது.

அதை உயர்த்திப்பிடிக்கும் வகையில், ‘வட ஆற்காடு மாவட்ட இரண்டாவது மாநாடு’ இருந்தது. 1954 ஜூன் மாதம் 26, 27 ஆகிய தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷன் எதிரில் மாநாடு நடைபெற்றது. முதல் நாள் ஈழத்து அடிகள் தலைமையில் நடைபெற்ற சமூகச் சீர்திருத்த மாநாட்டை, நாவலர் நெடுஞ்செழியனும் இரண்டாவது நாள் கே.ஏ.மதியழகன் தலைமையில் நடைபெற்ற அரசியல் மாநாட்டை, நாஞ்சில் கி.மனோகரனும் திறந்து வைத்தனர்.

இரண்டு நாள்களுமே எஸ்.எஸ்.இராஜேந்திரன் குழுவினரின் ‘அம்மையப்பன்’, ‘சந்திர மோகன்’ நாடகங்கள் நடைபெற்றன. ‘இசை முரசு’ நாகூர் ஹனீபாவின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாநாட்டில் பேரறிஞர் அண்ணா, கலைஞர், ஈ.வெ.கி.சம்பத், என்.வி.நடராசன், சி.பி.சிற்றரசு, பேராசிரியர் க.அன்பழகன், அ.பொன்னம்பலனார், ஆசைத்தம்பி, சி.பி.சிற்றரசு, அரங்கண்ணல், என்.எஸ்.இளங்கோ, ப.உ.சண்முகம், அன்னை சத்தியவாணி முத்து, கண்ணதாசன், தில்லை வில்லாளன் உள்ளிட்ட முன்னணித் தலைவர்கள் பலர் உரையாற்றினர்.

குறிப்பாக ஈழத்து அடிகள், பகுத்தறிவுக்கும் நாத்திகத்துக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்கிப் பேசினார். “ஓர் உண்மையான பகுத்தறிவுவாதி தன்னை ‘நாத்திகன்’ என்று சொல்லிக்கொள்ள மாட்டான். இன்று நாட்டில் காணப்படும் கடவுளும் மதமும், அவற்றுக்கு வகுக்கப்பட்டுள்ள இலக்கணமும் நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையா? ஒத்து வருபவைதானா? என்று ஆராய்ந்து, அந்த ஆராய்ச்சியின் பயனாக, இப்படிப்பட்ட கடவுளும், மதமும் நமக்குத் தேவையில்லை என்று கூறுகின்றோம். நாம் நாத்திகர்களும் இல்லை, ஆத்திகர்களும் இல்லை, பகுத்தறிவு வாதிகள்” என்றார்.

ஈழத்து அடிகளின் பேச்சின் முதல் வரி விவாதத்துக்குரியது. ஆனால், தி.மு.கழகத்தின் கொள்கை, கடவுள் மறுப்பல்ல, பகுத்தறிவை உயர்த்திப் பிடிப்பதே என்று நிறுவுவதாக இருந்தது அவரது பேச்சு. கடவுள் மறுப்பும்; ஏற்பும் ஓர் பொருட்டல்ல. அதன் பெயரால் திணிக்கப்பட்ட சமூக பேதத்தை நீக்குவதே அவசியம். அதில் பெரியாரின் பாதையில் அவரும் வென்றார்; அண்ணாவின் பாதையில் அவரும் வென்றார். அதனால்தான் தமிழ்நாடு வென்றது!

...கூட்டம் திரளும்

## `கருத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்!'

விஜய் தொலைக்காட்சியில், மொழிக் கொள்கை குறித்த விவாத நிகழ்ச்சி எடுக்கப்பட்டு, ஒளிபரப்புக்குத் தயாரான நிலையில், தடுக்கப்பட்டு விட்டதாக சர்ச்சையான நிலையில், அது குறித்து முனைவர் பேராசிரியர் அ.ராமசாமி அவர்களின் பதிவிலிருந்து...

‘விஜய் தொலைக்காட்சியின் நிறுத்தப்பட்ட அந்நிகழ்ச்சி அடிப்படையில் அரசியல் விவாதம்தான். ஆனால், நேரடியான கட்சி அரசியல் அல்ல என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. எப்போதும் கருத்தியல் விவாதங்கள் வழியாகப் பண்பாட்டு அரசியலை அதிகம் பேசியுள்ள நீயா? நானா?-வில், இதுபோன்ற அரசியல் விவாதங்கள் முன்பும் நடத்தப்பட்டுள்ளன. நானே சிலவற்றில் பங்கு பெற்றுள்ளேன். அவற்றில் ஒன்று ‘உலகமயமாக்கல்’ குறித்த விவாதம். ஒரு வட்டமேசை மாநாடு போலப் பிரபலமான ஆளுமைகளை அழைத்துப் பேசவைத்த அந்த விவாதம் 2010-இல் நடந்தது. படப்பிடிப்பின்போதே பெரும் சர்ச்சைகளை உருவாக்கியது. அவை நீண்ட நாள் நினைவில் இருந்தன.

முனைவர் மன்மோகன்சிங் ஆட்சியின்போது, தனியார்மயம், தாராளமயம், உலகமயம் என்ற கருத்துநிலைகளை விரிவாகப் பேசிய விவாத நிகழ்வு. அப்போதெல்லாம் இரவில் ஒளிபரப்பான ‘நீயா? நானா?’ ஒன்பது மணிக்கு ஆரம்பித்து இரண்டு மணிநேரம் நீளும். அந்த விவாதத்தில் ஒன்றிய அரசின் /ஆளுங்கட்சியின் ஆதரவாளர்களும் பங்குபெற்று விவாதித்தார்கள்.

அந்த நிகழ்ச்சிக்கான படப்பிடிப்பு இடைவேளையில், இது அரசுக்கு எதிரான நிகழ்ச்சியா? என்ற ஐயமெல்லாம் எழுப்பப்பட்டன. ஆனால், தடுத்து நிறுத்த வேண்டுமென்று யாரும் நினைக்கவில்லை; முயற்சிக்கவில்லை. ஆனால், இப்போதுள்ள ஒன்றிய அரசின் ஆதரவாளர்கள் தங்கள் கருத்தில் நம்பிக்கையில்லாதவர்கள்; மாற்றுக் கருத்தை ஏற்கும் பக்குவம் அற்றவர்கள். அதனால், தடுத்து நிறுத்துவதில் இறங்கிவிட்டார்கள்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியர் வழங்கிய இரண்டு மணி நேர உரை!



முனைவர் கடவூர் மணிமாறன்

26.10.1996 அன்று திருச்சி, தமிழ்ச் சங்கத்தில் நான் எழுதிய ‘பாரதிதாசன் - பெருஞ்சித்திரனார் பாடல்கள் ஓர் ஒப்பாய்வு” என்னும் முனைவர் பட்ட ஆய்வு நூலை அன்றைய கல்வி அமைச்சர் இனமானப் பேராசிரியர் அவர்கள் வெளியிட்டு உரையாற்றினார். பேராசிரியர் அவர்கள் இரண்டு மணி நேரம் உரையாற்றி, அற்புதமான பல தகவல்களைத் தந்தார். அவரது முழு உரையையும் பின்னர் தனி நூலாகவும் வெளியிட்டேன். அன்றைய விழாவுக்குத் தலைமை ஏற்ற குளித்தலை தமிழ்ச்சுடர் மீ.சு.இளமுருகுபொற்செல்வி அவர்களும் படத்தில் உள்ளார்கள். கழகத்தோழர் இராம.மணிவண்ணன் அந்நூலைப் பெற்றுக்கொண்ட காட்சி.

**- முனைவர் கடவூர் மணிமாறன், மேனாள் கரூர் மாவட்ட இலக்கிய அணித் தலைவர், குளித்தலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

56

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# தமிழர்களின் தொன்மையும் தனித்துவமும்!

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற சமூகநீதிக் கருத்தியலை அடிப்படையாகக் கொண்டு, அனைத்துத் தரப்பு மக்களும் பயனுறும் விதத்தில் ஒரு நிதிநிலை அறிக்கையை, கடந்த வாரம் தாக்கல் செய்தார் மாண்புமிகு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள். அது வெறும் வரவு செலவுத் திட்ட உரையாக இல்லாமல், தமிழர் நிதி நிர்வாகத்தின் பாரம்பரியம் மிக்க தொன்மையைப் பிரதிபலிக்கும் உரையாக இருந்தது.

இந்த உரைக்கு வலுக்கூட்டும் ஒரு பெரும் ஆவணத் தொகுப்பை, அருந்தொகுப்பாக 17/03/2025 அன்று வெளியிட்டார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். சங்க காலம் முதல் சமூகநீதிக் காலம் வரையிலான தமிழர் நிதி நிர்வாகத்தை, பல்வேறு ஆளுமைகளின் கட்டுரைகளுடனும், அரிய ஆவணங்களுடனும், புகைப்படங்களுடனும் மிகச் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது தமிழ்நாடு அரசின் நிதித்துறை.




பழந்தமிழ் அரசுகள், நிதி நிர்வாக மேலாண்மையை எப்படித் திட்டமிட்டு செயல்படுத்தின, ஒரு பேரரசின் வாகைக்கும் வீழ்ச்சிக்கும் நிதி நிர்வாகம் எப்படிப் பிரதான காரணமாக அமைந்தது என்பது தொடங்கி, வள்ளுவத்தில் தென்படும் பொருளியல் கருத்துகள், சேர சோழ பாண்டிய மன்னர்கள் வணிகத்துக்கு, வணிகருக்கு வழங்கிய ஊக்கம், அன்றைக்கு நிலவிய வரிவிதிப்பு முறைகள், விஜய நகரப் பேரரசு நெல்லையும் பொன்னையும் பகிர்ந்தளித்த விதம், பிரிட்டிஷ் காலத்து நிதி மேலாண்மை என பல நூற்றாண்டு வரலாற்றை ஆழமும் அகலமும் நிறைந்த நிபுணர்களின் கட்டுரைகள் மூலம் நமக்குக் கடத்துகிறது இந்நூல்.

காலந்தோறும் மாறிவந்த நாணயங்களின் படங்கள், நிதிநிலை அறிக்கை வெளியானதும் ‘முரசொலி’, ‘விடுதலை’, ‘தமிழரசு’, ‘நவமணி’, ‘The Mail’, ‘Indian Express’ உள்ளிட்ட பத்திரிகைகளில் வெளியான செய்திகள், ‘மெட்ராஸ் மாகாணத்தில் நிதி நிலை அறிக்கை’ தாக்கல் செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என வியப்பூட்டும் கருப்பு-வெள்ளை காகிதங்களால் நிரம்பியக் கருவூலமாகத் திகழ்கிறது இந்நூல்.

அதேபோல் வெறும் எண்களால் நிரம்பி இருந்த நிதி-நிலை அறிக்கையை, எளிய மக்களும் விளங்கிக் கொள்ளும் வகையில், ஜனநாயகப்படுத்தியது பேரறிஞர் அண்ணா ஆட்சி அமைந்த பிறகே தொடங்குகிறது. இன்றைக்கும் நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்போது சாமானிய மக்கள் அதனை உற்றுநோக்குவதற்கும், அது குறித்த பார்வையை உருவாக்கிக் கொள்ளவும் இந்த மக்கள்மயமாக்கல் முக்கிய காரணமாக இருந்தது என்பதை இத்தொகுப்பு கவனப்படுத்துகிறது.

கடைசி சில பக்கங்கள் இரட்டையாட்சி முறை தொடங்கிய 1920 முதல் தற்போது வரையிலான தமிழ்நாட்டு முதலமைச்சர்கள், நிதி அமைச்சர்கள், நிதிச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள் என அரிய பல ஆளுமைகளின் புகைப்படங்களையும் பெயர்களையும் கொண்டுள்ளது.

பலரது கூட்டுமுயற்சியால் உருவாகியுள்ள ‘தமிழர் நிதி நிர்வாகம்: தொன்மையும் தொடர்ச்சியும்’ என்ற இந்நூல், பல நூற்றாண்டு தமிழர் நிதிநிர்வாகத் தொன்மையையும் தனித்துவத்தையும் வெளிக்கொணரும் புதையலாக வெளியாகியுள்ளது.

...வாசிப்போம்.

## நம் வரலாறு ... நினைவூட்டல்

### அண்ணல் அம்பேத்கரும் கழக ஆட்சியும்!

2000-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10-ஆம் தேதி சென்னையில், அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபத்தினையும், அம்பேத்கரின் மார்பளவு சிலையையும், அப்போது கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் தலைமையில், முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார். கழக ஆட்சியில் அம்பேத்கரை பாராட்டிக் கொண்டாடிய அளவு, இந்தியாவில் யாரும் பாராட்டி, கொண்டாடியது இல்லை, என தனது உரையில் கலைஞர் குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131